

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப்போட்டி களில் 76 கல்லூரி மாணவர்களும் 240 பள்ளி மாணவ மாணவிகளும் கலந்து தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, மொத்தம் 1,14,000 ரூபாய் பரிசுத்தொகையும் மற்றும் சான்றிதழ், நினைவுப்பரிசு ஆகியவற்றையும் வழங்கி வெற்றிபெற்ற மாணவர்களை வாழ்த்திப் பேசினார். உடன் க.செல்வம் எம்.பி., ச.இனியரசு, கோகுலகண்ணன், ஏ.சிற்றரசு, பொன்.சிவக்குமார், வாலாஜாபாத் ஏ.வி.சுரேஷ்குமார், மாவட்டகுழு உறுப்பினர் ராஜா ராமகிருஷ்ணா, ரவிக்குமார், தனசேகரன், முத்து ஒன்றிய நிர்வாகிகள் வரதராஜ், நாகப்பன், வேதாசலம், மு.கண்ணன், குப்பன், அய்யப்பன், மதுரை, பொன்.சக்கரபாணி, பா.லோகநாதன், லோகநாதன், சீமான், மாரிமுத்து, புருசோத்தமன், சத்தியசீலன், ராஜா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மு.குணசேகரன், இராம்பிரசாத், சுரேஷ்குமார், சரளா தனசேகரன், எஸ். தமிழ்செல்வன், சு.சரண்ராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா : காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# மாணவர் அணி சார்பில் பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு போட்டிகள்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. பரிசு - நிதி வழங்கினார்! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ.19 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கினங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் அறிவிப்பின்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப்போட்டி 17- 11- 2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மதுராந்தகம் சூணாம்பேடு சாலையில் பொலம்பாக்கம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை சித்தாமூர் ஒன்றிய குழு தலைவரும் மேற்கு ஒன்றிய கழக செயலாளருமான ஏழுமலை துவக்கி வைத்தார். வள்ளுவம் போற்றிய கலைஞர், திராவிடத்தின் எழுச்சி கலைஞர், இந்திய ஜனநாயகத்தில் கலைஞரின் பங்கு என்ற தலைப்புகளில் கட்டுரை போட்டியும் நவீன தமிழ்நாட்டின் சிற்பி, கலைஞர் மகளிர் மாண்பு காத்த கலைஞர், கலைஞரும் சுயமரியாதையும் என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் நடைபற்றது.

மேற்படி போட்டிகளில் 76 கல்லூரி மாணவர்களும் 240 பள்ளி மாணவ மாணவிகளும் கலந்து தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். அனுபவமிக்க நடுவர்களால் மாணவர்களின் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, முதல் பரிசாக நான்கு பேருக்கு ரூபாய் 10,000/ வீதம் 40,000/மும், இரண்டாம் பரிசாக நான்கு பேருக்கு ரூபாய் 7000 வீதம் 28,000 மும், மூன்றாம் பரிசாக ரூபாய் 5000 வீதம் நான்கு பேருக்கு ரூபாய் 20,000 மும், நான்காவது மற்றும் ஆறுதல் பரிசாக ரூபாய் 26 பேர்களுக்கு 1000 வீதம் 26,000 என மொத்தம் 1,14,000 ரூபாய் பரிசுத்தொகையும் மற்றும் சான்றிதழ், மெடல் நினைவுப்பரிசு ஆகியவற்றையும் வழங்கி வெற்றி பெற்ற மாணவர்களை வாழ்த்திப் பேசினார்.

மேலும் அவர் பேசுகையில் மாணவர்களின் பேச்சுத் திறமை எழுத்து திறமைகளை வளர்த்துகொள்ள இது போன்ற வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் மாவட்ட துணை செயலாளர் க.செல்வம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மு.குணசேகரன், இராம்பிரசாத், சுரேஷ்குமார், சரளா தனசேகரன், எஸ். தமிழ்செல்வன், சு.சரண்ராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் ச.இனியரசு, மாவட்ட துணை செயலாளர் கோகுலகண்ணன், ஒன்றிய செயலாளர்கள் ஏ.சிற்றரசு, பொன்.சிவக்குமார், மாவட்டகுழு உறுப்பினர் ராஜா ராமகிருஷ்ணா, ரவிக்குமார், வாலஜாபாத் ஏ.வி.சுரேஷ் குமார், தனசேகரன், முத்து ஒன்றிய நிர்வாகிகள் வரதராஜ், நாகப்பன், வேதாசலம், மு.கண்ணன், குப்பன், அய்யப்பன், மதுரை, பொன்.சக்கரபாணி, பா.லோகநாதன், லோகநாதன், சீமான், மாரிமுத்து, புருசோத்தமன், சத்தியசீலன், ராஜா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சிறப்பு முகாம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கடலூர், நவ. 19-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி அன்று 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும் தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை நீக்கவும் நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு முகாம் நடைபெறும் நாட்கள் 25.11.2023 - 26.11.2023 தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில் மாவட்ட, ஒன்றிய, நகர பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் BLA 2 ஆகியோர் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார்,

# சங்கரய்யா மறைவுக்கு - சட்டப் பேரவையில் இரங்கல்!

சென்னை, நவ. 19-

சட்டப் பேரவையில் நேற்று, மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யா ஆகியோரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டப் பேரவையில் நேற்று, பேரவைத் தலைவர் பி.அப்பாவு அவர்கள், இதுகுறித்து படித்த இரங்கல் குறிப்பு வருமாறு:-

**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார்!**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார் அவர்கள் 19-10-2023 அன்று தமது 82 வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

ஆதிபராசக்தி பீடத்தை நிறுவி, அரை நூற்றாண்டிற்கும் மேலாக ஆன்மிகத் தொண்டாற்றுவதில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவர். மேலும், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்கள் துவங்கி சமூக சேவைகளை வழங்கிய பங்காரு அடிகளார் அவர்கள் 'பத்மஸ்ரீ' விருது பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பக்தர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

**விடுதலைப் போராட்ட வீரர் - இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முதுபெரும் தலைவர் என். சங்கரய்யா!**

பொதுவுடைமைப் போராளியும், விடுதலைப் போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முதுபெரும் தலைவருமான என். சங்கரய்யா அவர்கள் 15-11-2023 அன்று தமது 102வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு இந்திய நாட்டுக்காகவும், உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த என்.சங்கரய்யா அவர்கள் இந்திய விடுதலைக்கு முன்பே தேசியம் சார்ந்த செயல்பாடுகளால் பலமுறை சிறைக்குச் சென்றவர்.

1967-1971 ஆம் ஆண்டுகளில் மதுரை மேற்குத் தொகுதியிலிருந்தும், 1977-1980 மற்றும் 1980-1984 ஆகிய ஆண்டுகளில் மதுரை கிழக்குத் தொகுதியிலிருந்தும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர். இவரது மகத்தான சேவையைப் பாராட்டி, 2021 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு இவருக்கு 'தகைசால் தமிழர்' விருதை வழங்கி கௌரவித்தது.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், கட்சித் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

### இந்திய ரிசர்வு வங்கியின் முன்னாள் ஆளுநர்

# எஸ்.வெங்கிடரமணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.19–

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் எஸ். வெங்கிடரமணன் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். அதுவருமாறு :

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் எஸ்.வெங்கிடரமணன் (92) அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக மறைந்தார் என்றறிந்து வருத்தமடைந்தேன்.

இந்திய ரிசர்வ் வங்கியின் 18ஆவது ஆளுநராகவும், அதற்கு முன்பாக 198589 வரையில் ஒன்றிய நிதித் துறைச் செயலாளராகவும் திறம்படப் பணியாற்றி நன்மதிப்பைப் பெற்றவர் வெங்கிடரமணன்.

அவரை இழந்து தவிக்கும் அவரது மகளும் முன்னாள் தலைமைச் செயலாளருமான திருமதி கிரிஜா வைத்தியநாதன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.




